# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2332/02 - 2023 මැයි මස 15 වැනි සඳුදා - 2023.05.15

*2332/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/2013*

**(276 ஆம் அத்தியாயமான) சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டம்**

(276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவை கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவை
(கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக்காகவும்
அதன் சார்பிலும் கையொப்பமிடப்பட்டது).

கொழும்பு,
*2023, மே 15.*

**விதிகள்**

*1.* காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான (276 ஆம் அத்தியாயமான) சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(1) விதி 23 இனை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் விதியினை இடுவதன் மூலமும்:-*

"*23. (1) ஆளொருவர்-*

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருந்தாலன்றி;

(ஆ) விண்ணப்பத்தைச் செய்யும் நேரத்தில் அவர் பதினேழு வயதினைப் பூர்த்திசெய்திருந்தாலன்றி; அத்துடன்

(இ) பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான நன்னடத்தைச் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தாலன்றி,

அத்தகைய ஆள் இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராகத் தன்னைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கு இலங்கைச் சட்டக்கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்படுதலாகாது.

(2) இதன்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகத் தம்மைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கு மாணவர்களை இயலச் செய்கின்ற இலங்கைச் சட்டக்கல்லூரியின் கற்கைநெறி ஒன்றுக்கு அத்தகைய ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் நோக்கத்துக்காகப் பேரவையின் வழிகாட்டுநெறியின்கீழ் பரீட்சைகள் திணைக்களத்தினால் ஏதேனும் ஆண்டு தொடர்பில் நடாத்தப்பட்ட விடயத்திற்கேற்ப பொது நுழைவுப்பரீட்சை ஒன்று அல்லது விசேட நுழைவுப் பரீட்சை ஒன்று இருத்தல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் -

(அ) (i) பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில்; அல்லது

(ii) ஐக்கிய இராச்சியத்தின் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில்; அல்லது

(iii) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்டவாறு இவ்வுப விதியின் பந்தி (அ) வின் உட்பந்திகள் (i) அல்லது (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கத்தக்க உயர்தரத் தகைமைகளின் கட்டளைக்கற்களினுள் வேறு ஏதேனும் பரீட்சையில்

ஒரே தடவையில் இரண்டு திறமைச் சித்திகளையும் ஒரு சாதாரணச் சித்தியையும் தகைமையாகக் கொண்டிருப்பின்; அத்துடன்

(ஆ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (சாதாரணப்) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் அல்லது மேலே உள்ள பரீட்சைகளிற்கு சமமானவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையில் ஆங்கிலமொழியில் திறமைச் சித்தி ஒன்றையும் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழியில் திறமைச் சித்தியையும் கொண்டிருப்பின்,

இவ்விதியின் (1) ஆம் உபவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற அத்தகைய ஆள் ஏதேனும் ஆண்டு தொடர்பில் நடாத்தப்படும் பொது நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இலங்கைச் சட்டக்கல்லூரிக்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(4) (அ) பல்கலைக்கழக அனுமதியானது கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அப்போதைக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட Z-புள்ளியின் (Z-score) அல்லது வேறு எவையேனும் கட்டளைக்கற்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுமிடத்து (1) ஆம் மற்றும் (3) ஆம் உபவிதிகளின்கீழ் தகவுடையவராக இருக்கின்றவரும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுவதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்திலிருந்து சட்ட இளமாணிப் பட்டம் (LL.B) ஒன்றைப்

பெற்றுள்ளவருமான எவரேனும் ஆள் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சை மற்றும் இலங்கைச் சட்டக் கல்லூரியினால் நடாத்தப்படும் பொது மற்றும் விசேட நுழைவுப் பரீட்சைகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராகத் தன்னைத் தகைமைப்படுத்திக்கொள்வதற்கு இலங்கைச் சட்டக்கல்லூரியினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இலங்கைச் சட்டக்கல்லூரிக்கு நேரடியாகச் சேர்த்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(ஆ) உபவிதிகள் (1) மற்றும் (3) இன்கீழ் தகவுடையவராக இருக்கின்றவரும் மற்றும் திறந்த பல்கலைக் கழகம் அல்லது கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என்பவற்றிடமிருந்து சட்ட இளமாணிப் பட்டம் (LL.B) ஒன்றைப் பெற்றுள்ளவருமான எவரேனும் ஆள், பேரவையின் தற்றுணிபின்பேரில், இவ்வுபவிதியின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விலக்களிப்பிற்கு அல்லது விதி 75 (2) (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட விலக்களிப்பிற்கு உரித்துடையவராதல் வேண்டும். பேரவையானது காலத்திற்குக்காலம் அத்தகைய விலக்களிப்பை வழங்குவதற்கான அதனது முடிபை (5) ஆம் உபவிதியின் ஏற்பாடுகளிற்கு அமைய மீளாய்வு செய்யலாம்.

(5) பேரவையானது, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்திற்கு அல்லது கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு (4) ஆம் உபவிதியின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்குத் தேவைப்பட்ட நியமங்களைக் கொண்டிருப்பதற்கும் பேணுவதற்கும் அவசியமாக இருக்கக்கூடியவாறான நிபந்தனைகளை விதித்து விடயத்திற்கேற்ப சொல்லப்பட்ட நிறுவனங்களிற்குக் காலத்திற்குக்காலம் பணிப்புரைகளை வழங்கலாம்.

(6) உபவிதிகள் (1) மற்றும் (3) இன்கீழ் தகவுடையவராக இருக்கின்றவரும் பின்வரும் பட்டம் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து சட்ட இளமாணிப் பட்டம் (LL.B) ஒன்றைப் பெற்றுள்ளவருமான எவரேனும் ஆள் இவ்விதியின் (2) ஆம் உபவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்திருப்பின் இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராகத் தம்மைத் தகைமைப்படுத்திக் கொள்வதற்கு இலங்கைச் சட்டக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராகலாம்:-

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவின்கீழ் இலங்கையில் பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று; அல்லது

(ஆ) பேரவையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளைக்கற்களுக்கு இணங்க அத்தகைய நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக மதிப்பீடு ஒன்றைச் செய்திருந்து பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று.

(7) உபவிதிகள் (1) மற்றும் (3) இன்கீழ் தகவுடையவராக இருக்கின்றவரும் மற்றும்–

(அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், நியூசிலாந்து ஆகிய நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகவுள்ளதும்; அல்லது

(ஆ) குவாக்குவாரில்லி சீமென்ட் (Quanquarelli Symond (QS)) உலகப் பல்கலைக்கழக வரிசைப் படுத்தலின் அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய பட்டதாரியின் கற்கைக் காலத்தின்போது ஏதேனும் ஒரு வருடத்தினுள் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் வரிசைப்படுத்தலின் நியதிகளின்படி சட்டத்துறையில் முதல் நூறு (100) பல்கலைக்கழகங்களினுள் வருகின்றதான பல்கலைக்கழகம் ஒன்றாகவுள்ளதுமான

இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்ட இளமாணிப் பட்டத்தை (LL.B) பெற்றுள்ளவருமான எவரேனும் ஆள் (அத்துடன் அப்பல்கலைக்கழகம் அத்தகைய பல்கலைக் கழகங்களை அங்கீகரிப்பதற்காகப் பேரவையினால் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களுக்கு இணங்கக் காலத்திற்குக்காலம் பேரவையினால் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படலாம்) அத்தகைய ஆள் விசேட நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்திருப்பின் இலங்கை உயர்நீதிமன்றச் சட்டத்தரணி ஒருவராகத் தன்னைத் தகைமைப்படுத்திக்கொள்வதற்கு என இலங்கைச் சட்டக் கல்லூரிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராக இருக்கலாம்:

ஆயினும், எவ்வாறாயினும், பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளவரான ஆளொருவரின் விடயத்தில் அத்தகைய ஆள், அத்தகைய பல்கலைக்கழகங்களினால் வழங்கப்பட்ட பட்டம் தகைமையளிக்கின்ற சட்டப் பட்டம் ஒன்றாக இருப்பின் (QLD) அல்லது சட்டத்தரணிகள் குழாத்திற்கு நுழைவதற்கு அத்தகைய பட்டதாரியை இயலச் செய்கின்றதான பட்டம் ஒன்றாக இருப்பின் மற்றும் இயைபான நியாயாதிக்கத்தினுள் சட்டத்தரணி ஒருவராகத் தொழில் புரிவதற்காக இருப்பின் மட்டுமே இவ்விதியின் (2) ஆம் உபவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட நுழைவுப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(8) பேரவையானது ஒவ்வொரு கல்வி ஆண்டு தொடர்பிலும் (2) ஆம் உபவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட நுழைவுப் பரீட்சைகளில் தேறியும் அத்துடன் அத்தகைய நுழைவுப் பரீட்சைகளில் அவர்களின் செயல்புரிகையை அடிப்படையாகக் கொண்டு திறமை ஒழுங்குவரிசைப்படியும் அத்துடன் பேரவையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்பட்டவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டும் இலங்கைச் சட்டக் கல்லூரிக்குச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய மாணவர்களின் நூற்றுவீதத்தையும் எண்ணிக்கையையும் தீர்மானித்தல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், (10) ஆம் உபவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டு வினாத்தாள்கள் தொடர்பில் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவான புள்ளியைப் பெற்றுள்ள பரீட்சார்த்தி ஒருவர் சட்டக் கல்லூரிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தெரிவு செய்யப்படுதல் ஆகாது.

(9) பொது நுழைவுப் பரீட்சைக்கு அல்லது விசேட நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் அத்தகைய நோக்கத்திற்குப் பேரவையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய படிவத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் பேரவையினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான விண்ணப்பங்களின் முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் பேரவையினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான கட்டணக் கொடுப்பனவுக்கான எண்பிப்பு பற்றுச்சீட்டு ஒன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும். கட்டணமானது எந்தச் சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படமாட்டாது.

(10) (அ) உபவிதி (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொது நுழைவுப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பின்வரும் எழுத்துப்பரீட்சை வினாத்தாள்களுக்குத் தோற்றுவதற்கும் அவற்றில் சித்தியடைவதற்கும் தேவைப் படுத்தப்படல் வேண்டும்:-

(i) விடயத்திற்கேற்ப சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி; அத்துடன்
(ii) பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் இவ்வுபவிதியின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாள்களிற்கு சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழிமூலம் விடையிறுப்பதற்கு விருப்புத் தெரிவிக்கலாம். அவர் பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாள்களிற்கு ஒன்றில் சிங்கள மொழிமூலத்தில் அல்லது தமிழ் மொழிமூலத்தில் விடையிறுப்பதற்கு விருப்புத் தெரிவிப்பின், அவர் இவ்வுபவிதியின் (அ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆங்கிலமொழி வினாத்தாள்களில் தோற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அவர் பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாள்களில் ஆங்கில மொழியில் விடையிறுப்பதற்கு விருப்புத் தெரிவிப்பின், அவர் ஒன்றில் சிங்களமொழி அல்லது தமிழ்மொழி வினாத்தாளிற்குத் தோற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) ஏதேனும் கல்வி ஆண்டுக்கான அனுமதிகளுக்கான பொது நுழைவுப் பரீட்சை இலங்கைச் சட்டக்கல்லூரியின் அதிபரினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறு அக்கல்வி ஆண்டிற்கு உடன் முற்போந்த யூன் மாதத்தில் இயன்றவரை விரைவாக நடாத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) பொது நுழைவுப் பரீட்சையில் மொழி வினாத்தாளிற்கான பாடத்திட்டம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(i) ஒரு கட்டுரை; பிரதான குறிக்கோள் பரீட்சார்த்தியின் நினைவாற்றலை, வெளிப்படுத்தலை மற்றும் ஒழுங்குபடுத்தலைச் சோதிப்பதற்காகும்;

(ii) சுருக்கியெழுதல், பிரித்தெழுதல்;

(iii) வாக்கிய அமைப்பு, சொல்வளம், ஒத்தசொற்கள் மற்றும் எதிர்ச்சொற்கள், உருவக மற்றும் மரபுத்தொடர்.

(உ) சொல்லப்பட்ட பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் விடையிறுப்பதற்குக் குறித்தொதுக்கப் பட்ட நேரம் மூன்று மணித்தியாலங்களாக இருத்தல் வேண்டும்.

(11) உபவிதி (1) இல் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆளொருவர் தொழில் காரணமாக அல்லது வேறுவகையாக 21 ஆம் விதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விரிவுரைகளுக்கு வருகைதர இயலாதவராகவுள்ளார் அல்லது தொழில்பயில் காலப்பகுதி தொடர்பாக 36 ஆம் விதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு இயலாதவராகவுள்ளார் எனத் தோன்றினால், இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராகத் தகைமை பெறுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(12) விசேட நுழைவுப் பரீட்சை தொடர்பில் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) உபவிதி (6) மற்றும் (7) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பட்டதாரி ஒருவர், பேரவையின் பணிப்புகளின்கீழ் நடைபெறுகின்றதும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்றதுமான விசேட நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். பேரவையானது, காலத்துக்குக்காலம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படவேண்டிய சொல்லப்பட்ட விசேட நுழைவுப் பரீட்சை தொடர்பான பாடவிதானத்தையும் மற்றும் வேறு இயைபான காரணிகளையும் தயாரிப்பதற்கென, இலங்கைச் சட்டக் கல்லூரியில், பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபான பாடங்களில், ஆசிரியர்கள் குழாம் ஒன்றை நியமித்தல் வேண்டும்;

(ஆ) பேரவையானது, காலத்துக்குக்காலம், அத்தகைய விசேட நுழைவுப் பரீட்சையில் அத்தகைய பரீட்சார்த்தி ஆனவர் சட்டத்தில் எந்தப் பாடங்களில் பரீட்சிக்கப்படவேண்டுமோ அந்தப் பாடங்களைத் தீர்மானித்தல் வேண்டும்;

(இ) இலங்கை சட்டக் கல்லூரிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகத் தெரிவு செய்யப்படுவதற் கென, பரீட்சார்த்தி ஒருவர் வெட்டுப்புள்ளியைத் திருப்திப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட விசேட நுழைவுப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளினதும் காலத்துக்குக்காலம் பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஏலவேயுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையினதும் அடிப்படையில் திறமை ஒழுங்கு வரிசைப்படி தெரிவுசெய்யப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், செயல்முறைரீதியில் இயன்றதாகவிருக்கும் அளவுவரை, தெரிவு செய்யப்பட வேண்டிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது (2) ஆம் உபவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பொது நுழைவுப் பரீட்சையின்கீழ் இலங்கை சட்டக் கல்லூரிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கையை விஞ்சுதலாகாது.

(ஈ) விசேட நுழைவுப் பரீட்சையானது, பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கைச் சட்டக் கல்லூரிக்கான நுழைவாண்டுக்கு முற்போந்த ஆண்டின் குறித்துரைக்கப்பட்டவொரு மாதத்தின் போது நடைபெறுதல் வேண்டும்.

(2) அதன் (28) ஆம் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய விதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"28அ. இலங்கைச் சட்டக் கல்லூரியில் நடாத்தப்படுகின்ற எல்லாக் கற்கைநெறிகளும் ஆங்கிலமொழிமூலம் நடாத்தப்படுதல் வேண்டும்.".

(3) அதன் 30 ஆம் விதியில், "ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்டதும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் நடைமுறைக்கு வருகின்ற நாளுக்கு முன்னர் உள்ளதுமான இலங்கைப் பல்கலைக்கழகமொன்றின் அல்லது இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "பல்கலைக்கழக அனுமதியானது Z-புள்ளியின் (Z-score) அல்லது கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அப்போதைக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறெவையேனும் கட்டளைக்கற்களின் அடிப்படையின்மீது தீர்மானிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(4) அதன் 31 ஆம் விதியில், ''இலங்கைப் பல்கலைக்கழகமொன்றின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பல்கலைக்கழக அனுமதியானது Z-புள்ளியின் (Z-score) அல்லது கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அப்போதைக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறெவையேனும் கட்டளைக்கற்களின் அடிப்படையின்மீது தீர்மானிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(5) அதன் 32 ஆம் விதியில், அதன் பந்தி (அ) வை நீக்கிவிடுவதன்மூலமும்;

(6) அதன் 32 ஆம் விதியை உடனடுத்துப் பின்வரும் 32அ என்னும் புதிய விதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

''32அ. விதிகள் 30, 31 மற்றும் 32 என்பவற்றில் முரணாக எது எவ்வாறிருப்பினும், விசேட நுழைவுப் பரீட்சையில் தேறியுள்ளவரும் விதிகள் 23 (2) மற்றும் (12) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவருமான பட்டதாரியொருவர், இலங்கைச் சட்டக் கல்லூரியின் மாணவரொருவராக அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டபின்னர் எந்நேரத்திலும், வருமதியாகவுள்ள எல்லாக் கட்டணங்களையும் செலுத்திய பின்னர், பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏனைய இயைபான நிபந்தனைகளுக்கமைய, இறுதிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படலாம்.''

(7) அதன் 51 ஆம் விதியில், ''விதி 23 (1) உ இல்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''விதி 23 இன் உபவிதி (3) (ஆ) வில்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(8) விதி 75 ஐப் பின்வருமாறு திருத்துவதன்மூலமும்:-

(அ) அதன் உபவிதி (1) (அ) வில், ''ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்டதும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் நடைமுறைக்கு வருகின்ற நாளுக்கு முன்னர் உள்ளதுமான இலங்கைப் பல்கலைக்கழகமொன்றின் அல்லது இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''பல்கலைக்கழக அனுமதியானது Z-புள்ளியின் (Z-score) அல்லது கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அப்போதைக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறெவையேனும் கட்டளைக்கற்களின் அடிப்படையின்மீது தீர்மானிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் உபவிதி (2) (அ) வில், ''இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டதாரியொருவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''23 ஆம் விதியின் உபவிதிகள் (4) (ஆ) மற்றும் (5) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் அல்லது கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியொருவர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(இ) அதன் உபவிதி (2) (ஆ) வில், ''இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பல்கலைக்கழக அனுமதியானது, கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அப்போதைக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட Z-புள்ளியின் (Z-score) அல்லது வேறெவையேனும் கட்டளைக்கற்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஈ) அதன் உபவிதி (2) (இ) இல், ''இலங்கைப் பல்கலைக்கழகத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பல்கலைக்கழக அனுமதியானது, கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அப்போதைக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட Z-புள்ளியின் (Z-score) அல்லது வேறெவையேனும் கட்டளைக்கற்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின்'' என்னு ம் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(உ) "இலங்கைப் பல்கலைக்கழகம்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"இவ்விதிகளில்-

"கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" என்பது, 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என்று பொருளாகும்;

"திறந்த பல்கலைக்கழகம் அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் என்று பொருளாகும்;

"தகைமையளிக்கும் சட்டப் பட்டம் (QLD)" என்பது, வழக்குரைஞர் குழாத்தினுள் நுழைவதற்கும் இயைபான நியாயாதிக்கத்தில் சட்டத்தரணியொருவராகத் தொழில் புரிவதற்கும் வழக்குரைஞர் குழாத்தின் பரீட்சைகளுக்கான ஒரு நுழைவுத் தகைமை என்று பொருளாகும்."

(9) அதன் அட்டவணை II இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்துக்குப் பதிலாகப் படிவம் அ வின் மாற்றீடுகளில், "(கொழும்புப் பல்கலைக்கழகம்/இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(இயைபான பல்கலைக்கழகத்தின் பெயர்)" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட படிவத்துக்குப் பதிலாகப் படிவம் ஆ வின் மாற்றீடுகளில், "(கொழும்புப் பல்கலைக்கழகம்/இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(இயைபான பல்கலைக்கழகத்தின் பெயர்)" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

2. நிலைபெயர்கால ஏற்பாடுகள்

(அ) 30.12.2020 ஆந் திகதியன்று அல்லது அதன் முன்னர் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்ட இளமாணி பட்டம் (LL.B) ஒன்றிற்கு இட்டுச் செல்லும் கற்கைநெறி ஒன்றிற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள அல்லது அதனைப் பொறுப்பேற்றுள்ள மாணவர் ஒருவர் சொல்லப்பட்ட கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்கும் 23(2) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றாமல் இலங்கை சட்டக் கல்லூரிக்கான நுழைவை நாடுவதற்கும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்; ஆயினும் அத்தகைய மாணவர் 2025 ஆம் கல்வி ஆண்டில் அல்லது அதன் முடிவுக்கு முன்னர் அவரது சட்ட இளமாணிப் பட்டத்தை (LL.B) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) வில் ஏற்பாடு செய்யப்பட்ட நன்மையானது பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மற்றும் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு அத்தகைய கற்கைநெறியைப் பொறுப்பேற்கின்ற நிறுவனம் ஒன்று அல்லாதனவிற்குச் சட்ட இளமாணிப் பட்டத்திற்கு (LL.B) இட்டுச் செல்கின்ற கற்கைநெறி ஒன்றிற்கு அத்தகைய சேர்த்துக்கொள்ளுதல் பற்றி பேரவையின் திருப்திக்கு மாணவர் ஒருவர் எண்பிப்பை வழங்குவதன்மீது கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்;

(இ) 30.12.2020 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், சட்ட இளமாணிப் பட்டத்திற்கு (LL.B) இட்டுச் செல்கின்ற கற்கைநெறி ஒன்றைப் பொறுப்பேற்றுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் அல்லது கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஒருவர் விதி 23(3) இன் நியதிகளின்படி இரண்டு திறமைச் சித்திகள் மற்றும் ஒரு சாதாரணச் சித்தி ஆகிய தேவைப்பாடு இன்றி இலங்கைச் சட்டக் கல்லூரிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்; ஆயினும் அவர் இலங்கைச் சட்டக் கல்லூரியின் 2025 ஆம் கல்வி ஆண்டில் அல்லது அதன் முடிவுக்கு முன்னர் சட்ட இளமாணிப் பட்டத்தை (LL.B) பெற்றிருத்தல் வேண்டும்.

EOG 05-0110

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.